அடல்ஜியே!

நாட்டைப் பேணிய,
நல்ல தலைவன் நீ!
வெளியுறவு அமைச்சனாய்;
வியப்பூட்டிய நீ,
தலைமை அமைச்சனானபின்,
கோட்டை அழித்து,
பகை நாட்டுக்கும்;
பயணம் போனவன்!

ஏகாதிபத்தியத்தின்
இறுமாப்புகளை,
"பொக்ரானில்" ;
பொடி பொடியாக்கினாய்!
இந்த தேசம் கண்ட,
தன்னிகரில்லா தலைவன் நீ!

அன்னை இந்திராவோடு,
உன்னை எனக்கு,
அதிகம் பிடிக்கும்!

ஏகாதிபத்தியத்தின்,
எதிர் முனைக்கு அப்பால்,
காலம் கடந்த,
மானுடக் கவிஞன் நீ!

மக்கள் நலனை,
மண்ணில் நிரப்பிய,
மாமனிதன் நீ!

கலைஞர் என்னும் கருணாநிதியோடு,
நீ காட்டிய உறவில்,
மரணம் கூட,
இடைவெளியின்றி,
இறுகத் தழுவியதோ!

அடல்ஜியே!
இன்னும் ஒரு பிறவி
இருக்குமாயின்,
எங்கள் மண்ணில்
மீண்டும் பிறந்துவிடு!

நானிலம் போற்றும்,
நல்ல தலைவன்;
மீண்டும் வேண்டும்!

- கவிவளவன் 16-08-2018